36 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழிற்பேட்டையும், எஸ். வெள்ளாளப்பட்டி என்ற இடத்தில் ஒரு தொழிற்பேட்டையும் சிறப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுவும் குறிப்பாக, கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட எஸ். வெள்ளாளப்பட்டியில் ஏற்கெனவே ஒரு தொழிற்பேட்டை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், 2014–2015 ஆம் ஆண்டில் கரூர் மாவட்டத்திலேயே புஞ்சை ஆலாக்குறிச்சி என்ற பகுதியில் ஒரு புதிய தொழிற்பேட்டையை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதற்காக 52 ஏக்கர் நிலம் அங்கே கையகப்படுத்தப்பட்டு, பணிகள் இன்றைக்குச் சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று, சிட்கோ நில வங்கி மூலமாகக் கரூர் மாவட்டத்தில் குளித்தலை பகுதியில் புல்லடை கிராமத்தில் 50 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, அங்கே ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

175—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***52771—திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதியிலுள்ள குஜிலியம்பாறை கிராமத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு

2015 ஆகஸ்ட் 31]
பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.*

முற்பகல் 10–45

திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உயர்த்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைத்துத் துறைகளும் முன்னேற வேண்டுமென்பதற்காக, அனைத்துத் துறைகளுக்கும் அடிப்படையாக விளங்கக்கூடிய கல்வித் துறைக்கு அதிக நிதியினை ஒதுக்கி, 14 வகையான நலத் திட்டங்களை வழங்கி, சிறப்பு செய்து வருகின்றார்கள். அதற்காக தமிழக முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகின்றேன். திண்டுக்கல் மாவட்டத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளே இல்லை. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை ஒன்றியத்தில் அரசு சார்பில் ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியை அமைக்கும்போது, தொகுதி மக்கள் மட்டுமல்லாமல், மாவட்டத்திலிருந்து வெளியிடங்களுக்குச் சென்று படிக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்கும் நிச்சயமாக அது ஒரு வாய்ப்பாக அமையும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கனிவோடு பரிசீலனை செய்து, வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்திலே ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, திண்டுக்கல் மாவட்டத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளே இல்லையென்ற ஒரு செய்தியை இங்கே சொல்லியிருக்கிறார்கள். திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாணவர்கள் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, அங்கு 14 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டுக்*

கொண்டிருக்கின்றன. அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியான அருள்மிகு பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியும் அங்கு செயல்பட்டு வருகிறது. மேலும், கட்டணத்தை எடுத்துக்கொண்டால்கூட, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறதோ அதே அளவு கட்டணம்தான் அங்கே வசூலிக்கப்படுகிறது. ஏற்கெனவே 30 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள்தான் தமிழ்நாட்டில் இருந்தன. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூடுதலாக 11 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளைத் தந்ததனால், இன்றைக்கு 30-லிருந்து 41 ஆக பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுவாக, ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி–polytechnic college–தொடங்கப்பட வேண்டுமெனில், கிராமப்புறமாக இருந்தால், அதற்கு 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. நகர்ப்புறம் மற்றும் மாநகராட்சிப் பகுதியாக இருந்தால், ஒன்றரை ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அதற்கு தொடரும் செலவு, தொடரா செலவு என நிதி தேவைப்படுகிறது. ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் போன்றவை தொடரும் செலவினம் என்ற கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அந்த வகையில், ஆண்டொன்றுக்கு 7 கோடி ரூபாய் தொடரும் செலவினமாகக் கணக்கிடப்படுகிறது. இயந்திரம் வாங்குவதற்கு ரூபாய் ஒரு கோடியே 89 இலட்சம்; கணினிகள் வாங்குவதற்கு ரூபாய் 1 கோடியே 43 இலட்சம்; அறைகலன்கள் வாங்குவதற்கு ரூபாய் 78 இலட்சம்; நூலகத்திற்குப் புத்தகங்கள் வாங்குவதற்கு ரூபாய் 40 இலட்சம்; கட்டடங்கள் கட்டுவதற்கு மட்டும் ரூபாய் 32 கோடியே 50 இலட்சம் என இவையனைத்தும் தொடரா செலவினம் என்ற கணக்கில் வருகிறது. ஆகமொத்தம் கிட்டத்தட்ட ரூபாய் 50 கோடி அளவுக்கு ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்குக் கூடுதல் செலவாகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் ஓர் அரசு சார்ந்த பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்

2015 ஆகஸ்ட் 31]
அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

176—

திருக்கோயில் பணியாளர்களுக்கான குடியிருப்புகள்

***54781—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் வட்டம், திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தரும் கொள்கை முடிவு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு கட்டப்பட்டது. சம்பந்தர், அப்பர், சுந்தரர், அருணகிரிநாதர் போன்ற அருளாளர்கள் தேவாரம், திருப்புகழ் பாடிய, திருத்தலம் இது, உதவி ஆணையர் அந்தஸ்திலுள்ள அலுவலரால் நிருவகிக்கப்படும் சிறப்பு வாய்ந்த திருத்தலம். நவக்கிரகத் தலங்களில் ஒன்றான இத்திருக்கோயிலில், ராகு காலத்தில் ராகு பகவானுக்கு நடைபெறும் சிறப்பு அபிஷேக ஆராதனை நேரத்தில்